இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

"கடவுளின் பெயரால் ஒருபோதும் போரிட முடியாது. விசுவாசிகளாகிய நமக்கு, 'சமயத்தின் பெயரால் போரிடுவது என்பது சமயத்தையே தாக்குவதற்குச் சமம்.' புனிதமான போர் என்று எதுவுமே இல்லை; அமைதி ஒன்று மட்டுமே புனிதமானது."

இந்துக்களும் கிறிஸ்தவர்களும்: 'அசீசியின் சந்திப்பில்' இணைந்து அமைதிக்கான பாதைகளை உருவாக்குவோம்.

2026 தீபாவளித் திருநாளுக்கான வாழ்த்துச் செய்தி

அன்பார்ந்த நண்பர்களே,

இந்த ஆண்டு நவம்பர் 8-ஆம் தேதி நீங்கள் கொண்டாடும் தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு, சமயங்களுக்கிடையே உரையாடலுக்கான வத்திக்கான் அவை (Dicastery for Interreligious Dialogue) தனது அன்பான, செபம் நிறைந்த நல்வாழ்த்துக்களை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறது. நன்மைகள் அனைத்திற்கும் ஊற்றாக விளங்கும் இறைவன் உங்களையும், உங்கள் குடும்பங்களையும், உங்கள் அன்பிற்குரியவர்களையும், உங்கள் சமூகத்தையும் மிகுந்த மகிழ்ச்சி, அமைதி மற்றும் வளங்களால் ஆசீர்வதிப்பாராக!

நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு, 1986 அக்டோபர் 27 அன்று, புனித இரண்டாம் யோவான் பவுல் அவர்களின் அழைப்பின் பேரில், உலகச் சமயங்களின் பிரதிநிதிகள் அமைதிக்காகச் செபிக்க 'அசீசி' (Assisi) நகரில் ஒன்று கூடினார்கள். இன்றைய மனிதகுலம் எதிர்கொள்ளும் பல சவால்களுக்கு மத்தியில் குறிப்பாகப் போர்கள், மோதல்கள் மற்றும் அரசியல் ஆதாயங்களுக்காகச் சமயங்களைப் பயன்படுத்துதல் போன்ற சூழலில்—1986-ஆம் ஆண்டின் அந்த அசீசி சந்திப்பை நினைவுகூர்வது, அசீசியின் சந்திப்பால் ஈர்க்கப்பட்டு, இந்துக்களும் கிறிஸ்தவர்களும் இணைந்து எவ்வாறு அமைதியின் பாதைகளை உருவாக்க முடியும் என்பதைப் பற்றிச் சிந்திக்க நமக்கு ஒரு நல்வாய்ப்பை வழங்குகிறது.

- **ஒன்றாக இணைந்து செபித்தல்:** அமைதிக்கான பகிர்ந்தளிக்கப்பட்ட ஆன்மீக அர்ப்பணிப்போடு, மற்றவரின் சமயப் பாரம்பரியத்தை மதித்து, அவரவர் சமயப் பாரம்பரியத்தின்படி செபிப்பதாகும். உண்மையில், உண்மையான செபம் மனிதர்களிடையே உள்ள வேறுபாடுகளைக் கடந்து, மனங்களையும் இதயங்களையும் அமைதிப்படுத்தி, நம்மை இரக்கமும் அமைதியும் கொண்ட மனிதர்களாக மாற்றுகிறது.
- **சகோதரத்துவத்தை வளர்த்தல்:** சகோதரத்துவம், மற்றவர்களிடம் — குறிப்பாக ஏழைகளிடமும் பலவீனர்களிடமும் — இறைவனின் முகத்தைக் காண்பதற்கும், அவர்களோடு உறுதுணையாக நிற்பதற்கும் நமக்கு உதவுகிறது. நம்மிடையே சகோதரத்துவம் எவ்வளவுக்கு எவ்வளவு வளர்கிறதோ, அவ்வளவுக்கு உலகத்தில் அமைதி ஆழமாக வேரூன்றும்.
- **சமயங்களுக்கிடையேயான உரையாடல்:** இன்று இத்தகைய சமயங்களுக்கிடையேயான உரையாடல் மிகவும் அவசியமான ஒன்றாக மாறியுள்ளது. "அனைத்துப் பெருமைமிக்க ஆன்மீகப் பாதைகளின் மையத்திலும் அமைதிக்கான செய்தியே உள்ளது" என்பதை இது நினைவூட்டுகிறது.


அசீசியின் சந்திப்பு என்பது அடிப்படையிலேயே அமைதிக்கான ஒரு வாக்குறுதியாகும். அந்த அசீசி சந்திப்பு பல்வேறு சமயப் பாரம்பரியங்களைச் சேர்ந்த மக்களை ஒன்றுபடுத்தியதுடன், உண்மையான சமயங்கள் இயல்பாகவே அமைதியை ஊக்குவிக்கின்றன என்பதையும், அனைத்து வகையான வன்முறைகளையும் நிராகரிக்கின்றன என்பதையும் உலகுக்குக் காட்டியது. ஏனெனில், வன்முறை என்பது சமயத்தின் கொள்கைகளுக்கு முரணானது மற்றும் அதை அழிப்பதாகும்.

நமது அன்றாட வாழ்க்கையில் அமைதிக்காகச் செபிப்பதன் மூலமும், சகோதரத்துவ மனப்பான்மையுடன் வாழ்வதன் மூலமும், சமயங்களுக்கிடையேயான உரையாடலில் தீவிரமாக ஈடுபடுவதன் மூலமும், மற்ற சமய மக்களுடனும் நல்லெண்ணம் கொண்ட அனைத்து மக்களுடனும் கைகோர்த்து, உலக அமைதிக்காக உழைத்து, அசீசியின் சந்திப்பை நமது வாழ்க்கையில் இன்னும் அதிகமாக வாழ்வோமாக!

உங்கள் அனைவருக்கும் எங்களது இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்!

Cardinal George Jacob Koovakad

'நாம் கடவுளின் அமைதியைக் கொணரும் ஆயுதமற்ற கருவிகளாக இருப்போம்' - திருத்தந்தை



அசீசியில் நடைபெற்ற சர்வதேச அமைதி மாநாட்டின் பங்கேற்பாளர்களுக்கு அனுப்பிய காணொளிச் செய்தியில், "கடவுளின் பெயரால் ஒருபோதும் போரிட முடியாது" என்பதை வலியுறுத்திய திருத்தந்தை பதினான்காம் லியோ "ஆண்டவரின் அமைதியைக் கொணரும் ஆயுதமற்ற கருவிகளாக" மாறுமாறு அழைப்பு விடுத்துள்ளார்.

"கடவுளின் பெயரால் ஒருபோதும் போரிட முடியாது. விசுவாசிகளாகிய நமக்கு, 'சமயத்தின் பெயரால் போரிடுவது என்பது சமயத்தையே தாக்குவதற்குச் சமம்.' புனிதமான போர் என்று எதுவுமே இல்லை; அமைதி ஒன்று மட்டுமே புனிதமானது."

சாந்த் எஜிதியோ (Community of Sant'Egidio) சமூகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட 'அசீசி ஆன்மீக சர்வதேச அமைதி மாநாட்டில்' பங்கேற்றவர்களுக்கு, செவ்வாய்க்கிழமை அனுப்பிய வலிமையான காணொளிச் செய்தியில் திருத்தந்தை பதினான்காம் லியோ இந்த நினைவூட்டலைப் பகிர்ந்துகொண்டார்.

புனித பிரான்சிஸ் பிறந்த உம்பிரியா நகரத்தில் முன்று நாட்கள் நடைபெற்ற இம்மாநாட்டின் மையப் பொருள்: "ஆயுதமற்ற மற்றும் வன்முறையை அகற்றும் அமைதி" எனபதாகும்.

'அசீசி ஆன்மீகத்தை' வளர்க்க வேண்டிய அவசியம்

"அதிகாரக் கலாச்சாரம்" மேலோங்கியுள்ள இக்காலத்தில், 'அசீசியின் ஆன்மீகத்தை' வளர்க்க வேண்டிய அவசியம் உள்ளது என்று திருத்தந்தை லியோ குறிப்பிட்டார். இதன் பொருள்:

- போருக்குச் சமயம் வழியே நியாயம் கற்பிப்பதை நிராகரித்தல்,
- அமைதிப் பேச்சுவார்த்தை மற்றும் உரையாடலை முன்னெடுத்தல்,
- அமைதியான எதிர்காலத்துக்காக இறைச்சிந்தனையோடு கூடிய செயல்பாடுகளில் ஈடுபடுதல்.

இந்தச் சூழலில், அமைதி என்பது மீண்டும் "அனைத்து மக்களின் பொதுவான லட்சியமாகவும், நம் தேர்வுகளுக்கு வழி காட்டும் விண்மீனாகவும், அந்தியை வெளிச்சம் போட்டுக் காட்டும் அளவுகோலாகவும், மனிதகுலத்தின் பொதுவான இலக்காகவும் மாற வேண்டும்" என்று திருத்தந்தை வலியுறுத்தினார்.

"நாம் எங்கும் அமைதியையே மீண்டும் கட்டியெழுப்ப வேண்டும், மாறாக மேலும் போர்களுக்குத் தயாராகக் கூடாது" என்று அழுத்தமாகக் கூறிய அவர், போரை நியாயப்படுத்துவதற்காகக் கடவுளின் பெயரை ஒருபோதும் தவறாகப் பயன்படுத்தக் கூடாது என்பதை மீண்டும் நினைவுறுத்தினார். அசீசியில் தொடங்கிய இந்தப் பயணம், முதன்முதலாக "ஜெபத்தின் பாதை" ஆகும் என்று அவர் விளக்கினார்.

ஜெபம் 'பலவீனமானது' போல் தோன்றினாலும், அது தாழ்மையான வல்லமை

"உலகின் அதிகாரங்களுக்கு முன்னால் ஜெபம் பலவீனமானது போலத் தோன்றலாம், ஆனால் அதுவே விசுவாசிகளின் தாழ்மையான வல்லமையாகும்" எனவே, "போரையும் பயங்கரவாதத்தையும் நாடுவோரின் இதயங்களைக் கடவுள் தொட வேண்டும் என்று, அமைதியை அருளும் அவரிடமே நாம் மன்றாடுவோம். ஜெபம் ஒருபோதும் வீண்போகாது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது" என்று அவர் கோரிக்கை விடுத்தார். உலகிற்கு உரையாடல் மிகவும் தேவைப்படுகிறது என்பதை வலியுறுத்திய திருத்தந்தை, "அசீசியின் பாதை" சமயத் தலைவர்களைத் தூண்டுகிறது என்றார். வன்முறைச் சுழற்சியிலிருந்து மனிதகுலத்தைப் படிப்படியாக வெளியேற்ற, "அகந்தையின் மொழி மறைந்து அமைதி, பேச்சுவார்த்தை மற்றும் புரிந்துகொள்ளுதலின் மொழி மேலோங்க" சமயத் தலைவர்கள் விசுவாசிகள் மத்தியிலும் சமூகத்திலும் உரையாடலின் சூழலை உருவாக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

தமிழாக்கம் ஹெரால்டு

'லத்தீன் அமெரிக்காவிற்கு மீண்டும் செல்ல ஆவலுடன் காத்திருக்கிறேன்' – திருத்தந்தை

நவம்பர் 6 முதல் 17 வரை உருகுவே, அர்ஜென்டினா மற்றும் பெரு ஆகிய நாடுகளுக்குத் திருத்தந்தை பதினான்காம் லியோ மேற்கொள்ளவிருக்கும் திருத்தூதுப் பயணம் குறித்து திருப்பீடச் செய்தித் தொடர்பகம் உறுதி செய்துள்ளது. இது குறித்துத் திருத்தந்தை தனது மகிழ்ச்சியையும் ஆர்வத்தையும் வெளிப்படுத்தியுள்ளார்.

உருகுவே, அர்ஜென்டினா மற்றும் பெரு ஆகிய நாடுகளுக்கான திருத்தூதுப் பயணத்திற்கு இன்னும் இரண்டு வாரங்களுக்கும் குறைவான நாட்களே உள்ள நிலையில், நவம்பர் 6-17 தேதிகளில் இந்தப் பயணத்தை மேற்கொள்வது குறித்துத் திருத்தந்தை பதினான்காம் லியோ தனது "மிகுந்த மகிழ்ச்சியையும் ஆர்வத்தையும்" மீண்டும் வெளிப்படுத்தியுள்ளார்.

அந்த அறிக்கையில், திருத்தந்தையின் இந்தப் பயணம் "உள்ளூர் திருஅவைகளுடனான அன்புறவின் பிணைப்புகளை வலுப்படுத்தவும், விசுவாசிகளைத் தங்கள் இறைத்தூதுப் பணியில் ஊக்கப்படுத்தவும், உருகுவே, அர்ஜென்டினா மற்றும் பெரு நாட்டு மக்களுக்கு விசுவாசம், நம்பிக்கை மற்றும் அமைதியின் செய்தியைக் கொண்டு சேர்க்கவும், அவர்களின் விசுவாசத்தைச் சந்தித்து, கிறிஸ்து நம் உலகிற்குத் தரும் நம்பிக்கையையும் அமைதியையும் அவர்களோடு பகிர்ந்துகொள்ளவும் வாய்ப்பளிக்கும்" என்று கூறப்பட்டுள்ளது.

"என் வாழ்வின் பல தருணங்களை நான் அனுபவித்த அந்த கண்டத்திற்கு மீண்டும் செல்ல ஆவலுடன் காத்திருக்கிறேன்" என்று திருத்தந்தை அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். "இந்தப் பயணம் நாம் ஒருவருக்கொருவர் இதயங்களைத் திறக்கவும், சகோதர சகோதரிகளாக நம் அன்புறவை வலுப்படுத்தவும், மகிழ்ச்சியோடு நற்செய்தியை அறிவிக்கும் நம் அர்ப்பணிப்பைப் புதுப்பிக்கவும் ஒரு வாய்ப்பாக அமையட்டும்."

அக்டோபர் 13 அன்று திருத்தந்தை அறுவை சிகிச்சை செய்துகொண்டதற்குப் பிந்தைய குணமடைதல் குறித்துக் குறிப்பிடுகையில், மருத்துவக் குழுவின் சாதகமான மதிப்பீடுகளின்படி, திருத்தந்தையின் உடல்நலன் "தொடர்ந்து முன்னேறி வருகிறது" என்று அறிக்கை கூறியுள்ளது.

"முன்பே தெரிவிக்கப்பட்டபடி, அறுவை சிகிச்சை வெற்றிபெற்றது; எந்தச் சிக்கல்களும் இல்லை. அதைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட மருத்துவப் பரிசோதனைகளில், அந்தப் பிரச்சனை உள்வட்டத்திற்குள்ளேயே சரி செய்யப்பட்டுவிட்டதும், மேற்கொண்டு புற்றுநோய் சிகிச்சைகள் (oncological treatment) எதுவும் தேவையில்லை என்பதும் உறுதி செய்யப்பட்டுள்ளது" என்றும் அதில் சேர்க்கப்பட்டுள்ளது.

மருத்துவர்களுடன் கலந்தாலோசித்து, "தனது உடல்நலனை முன்னிலைப்படுத்தும் அதே வேளையில், பணிப் பொறுப்புகளையும் தொடர்ந்து நிறைவேற்றும் வகையில்" தினசரி அட்டவணையைச் சரிசெய்து, திருத்தந்தை லியோ படிப்படியாகத் தனது பணிகளை மீண்டும் தொடங்கியுள்ளார் என்று அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது. "அவர் முக்கியமான சந்திப்புகளையும் பொது நிகழ்ச்சிகளையும் தொடர்ந்து நடத்தி வருகிறார்; அன்றாடத் தேவைகளில் கவனமாக இருக்கும் அதே வேளையில், தேவையான ஓய்வு நேரத்தையும் எடுத்துக்கொள்கிறார்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகெங்கிலும் இருந்து தமக்குக் கிடைத்த ஜெபங்களுக்கும் அன்பிற்கும், குணமடையும் காலத்தில் தம்மைக் கவனித்துக்கொண்ட மருத்துவ நிபுணர்களின் அர்ப்பணிப்புள்ள பராமரிப்பிற்கும் திருத்தந்தை "ஆழ்ந்த நன்றியுடையவராக" இருக்கிறார்.

தமிழாக்கம் ஹெரால்டு

இயேசு கிறிஸ்துவால் மட்டுமே நமக்கு விடுதலை தர முடியும்.



மிரி மறைமாவட்டத்தின் ஆயர் ரிச்சர்ட் இங் (Bishop Richard Ng), அக்டோபர் 26 அன்று ஆசிய ரேடியோ வெரித்தாஸ் (RVA) தலைமையகத்தில் உள்ள மூன்று தூயவர் சிற்றாலயத்தில் (Three Saints Chapel) திருப்பலி நிறைவேற்றினார். அப்போது அவர் பேசுகையில், "பாவம், கசப்பு, பயம் மற்றும் வெறுப்பு ஆகிய சுமைகளிலிருந்து இயேசு கிறிஸ்துவால் மட்டுமே மனிதர்களுக்கு விடுதலை அளிக்க முடியும்" என்று கூறினார்.

தமது மறையுரையில், அன்றைய நற்செய்தி வாசகத்தைச் சுட்டிக்காட்டிய ஆயர், வாழ்க்கையின் போராட்டங்களால் பாரஞ்சுமப்பவர்களுக்கு இயேசு ஆன்மீக விடுதலையையும் குணமளிப்பையும் எவ்வாறு வழங்குகிறார் என்பதை விளக்கிப் பேசினார்.

இயேசுவின் குணமளிக்கும் பணியைக் குறிப்பிட்டுப் பேசிய ஆயர் இங், "அந்தப் பெண்ணின் ஆன்மாவை விடுவிப்பதன் மூலம், இயேசு அவரது உடலையும் விடுவிக்கிறார்" என்றார். மேலும், யூதர்களின் பாரம்பரிய நம்பிக்கையில் நோய்கள் பெரும்பாலும் பாவத்தோடு தொடர்புபடுத்தப்பட்டதால், பாவமன்னிப்பு என்பது மனிதரின் முழுமையான குணமளிப்பாகப் பார்க்கப்பட்டது என்றும் அவர் விளக்கினார்.

இன்றும் இயேசு நமக்கு ஆன்மீகச் சுமைகளிலிருந்து மட்டுமல்லாமல், நம்மை முன்னோக்கிச் செல்லவிடாமல் தடுக்கும் மனவேதனைகளிலிருந்தும் விடுதலை அளிக்க விரும்புகிறார் என்று ஆயர் கூறினார்.

"வாழ்க்கையின் அழுத்தங்கள், நாம் நெஞ்சில் சுமந்து கொண்டிருக்கும் மன்னிக்க முடியாத மனம் அல்லது கசப்பு உணர்வுகள், நம்மைப் பயத்தில் முடக்கிப்போடும் மனக்குறைகள் போன்ற அனைத்துச் சுமைகளிலிருந்தும் இயேசு நம்மை விடுவிக்க விரும்புகிறார்," என்று அவர் குறிப்பிட்டார்.

கடவுளின் பிள்ளைகள் என்ற கிறிஸ்தவ அடையாளத்தோடு இந்தச் செய்தியை இணைத்துப் பேசிய ஆயர், இயேசு கிறிஸ்துவின் வழியாக எல்லாரும் மீட்படைய வேண்டும் என்பதே கடவுளின் விருப்பம் என்பதை வலியுறுத்தினார். "இயேசுவின் மூலமாக எல்லாரையும் மீட்கவே கடவுள் வருகிறார்" என்றும் அவர் கூறினார்.

திருப்பலியில் பங்கேற்றவர்களிடம் பேசுகையில், இயேசுவை தங்கள் வாழ்க்கையில் வரவேற்கவும், முழுமையான விசுவாசத்தோடு வாழ்வதைத் தடுக்கும் அனைத்திலிருந்தும் தங்களை விடுவிக்குமாறு அவரிடம் மன்றாடவும் ஆயர் கேட்டுக்கொண்டார்.

"நாம் உண்மையிலேயே கடவுளின் பிள்ளைகளாகவும், இறை அரசின் உரிமையாளர்களாகவும் சுதந்திரமாக வாழ்வதற்கு, நம் இதயங்களையும் மனங்களையும் வாழ்க்கையையும் இயேசுவுக்குத் திறந்துகொடுப்போம்," என்று அவர் கேட்டுக்கொண்டார்.

ஆண்டின் பொதுக்காலம் 32ஆம் ஞாயிறு

ஞானநூல் 6:12-16
1 தெசலோனிக்கியருக்கியர் 4:13-18
நற்செய்தி மத்தேயு 25:1-13

ஆண்டின் பொதுக்காலம் 32வது ஞாயிரில் பயணிக்கிறோம். இன்றைய முதல் வாசகம் நம் விசுவாசத்தில் உறுதியாக இருக்கவும், கடவுளின் ஞானத்தைப் புரிந்துகொள்ளவும் எப்பொழுதும் விழிப்புடன் இருப்பதே முக்கியம் என்று நமக்குக் கற்றுக்கொடுக்கிறது.

தொடக்க காலத்தில் வாழ்ந்த கிறிஸ்தவர்கள் மத்தியில் ஒரு குழப்பம் இருந்தது. இயேசு கிறிஸ்து மீண்டும் மிக விரைவில் வருவார் என்று அப்போஸ்தலர் பவுல் அவர்களுக்குப் போதித்திருந்தார். ஆனால், இயேசு வருவதற்கு முன்பே சில கிறிஸ்தவர்கள் இறந்துவிட்டார்கள். இதனால், "இறந்துபோன இவர்களின் கதி என்னவாகும்?" என்ற கவலை அந்தத் திருஅவையினருக்கு ஏற்பட்டது.

ஆண்டவர் இயேசு மீதுள்ள நம்பிக்கையையும் எதிர்பார்ப்பையும் கொண்டுதான் நாம் ஒவ்வொரு நிகழ்வையும் பார்க்க வேண்டும்; மரணம் என்பது இறுதி கிடையாது என்று புனித பவுல் இன்றைய இரண்டாம் வாசகத்தில் தெளியவைக்கிறார்.

நாம் அனைவரும் விண்ணகக் திருமண வீட்டுக்குத் தகுதியானவர்களாக மாற, எப்போதும் விழிப்புடனும் ஆயத்தத்துடனும் இருக்க வேண்டும். இறுதி நாளில் நாம் ஆண்டவரின் சமூகத்திலிருந்து விலக்கப்பட்டுவிடக் கூடாது என்பதற்காகவே இன்றைய நற்செய்தில் பத்து கன்னியர்கள் உவமையின் வழி எச்சரிக்கை விடுக்கிறார்.

விண்ணக அரசை விவரிக்க இயேசு முன்பு வேறு ஒரு கல்யாண விருந்து உவமையைக் கூறியிருந்தார். அது விருந்துக்கு அழைக்கப்பட்டு, வராதவர்களைக் குறித்தது. ஆனால், இந்த உவமையோ விருந்து அழைப்பை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டவர்களைப் பற்றியது.

உவமையில் வரும் பத்து கன்னியரும் அனைத்து கிறிஸ்தவர்களையும் குறிக்கிறார்கள். ஒரு நபர் திருமுழுக்கு (Baptism) பெறும்போது, அவர் விண்ணகப் பயணத்தைத் தொடங்குகிறார்; அவருக்கு விண்ணக விருந்துக்கான அழைப்பு கிடைக்கிறது. அதுவே தொடக்கம்.

மனிதர் தன் நற்புத்தியைப் பெறும் காலத்திலிருந்து, கடவுளின் கட்டளைகளின்படி வாழ்ந்து தன்னைத் தயார்படுத்திக்கொள்ள வேண்டும். "இதோ மணமகன் வருகிறார்! அவரைச் சந்திக்கச் செல்லுங்கள்!" என்ற அழைப்பு எப்போது வேண்டுமானாலும் வரலாம்.

இந்த அழைப்பு இருமுறை வரலாம்:

1. ஒவ்வொருவரின் மரண நேரத்தின்போது.
2. உலகின் இறுதித் தீர்ப்பு நாளில்.

வாழும் காலத்தில் கடவுள் நம் ஒவ்வொருவரையும் விண்ணக விருந்துக்கு அழைக்கிறார்; அதற்குத் தேவையான அருளையும் தருகிறார். ஆனால், மதியற்ற கன்னியர்களைப் போல, பலரும் இதைப் பயன்படுத்தத் தவறிவிடுகிறார்கள்; காலம் கடந்த பின்பே தங்கள் முட்டாள்தனத்தை உணர்கிறார்கள்.

கிறிஸ்து நமக்காகச் சிலுவையில் உயிர் துறந்தார்; தனது போதனைகளையும் அருளையும் நமக்குத் தந்தார். ஆனால், பலரோ தங்கள் விண்ணகப் பேற்றை அற்பக் காரியங்களுக்காக இழந்துவிடுகிறார்கள்.

மதியற்ற கன்னியர்கள் கவனக்குறைவால் பொன்னான வாய்ப்பை இழந்துவிட்டார்கள். அதைக் குறித்து நாம் பரிதாபப்பட்டாலும், அந்தத் தோழிகளின் அலட்சியத்தால் மிகவும் அவமானப்படுத்தப்பட்ட மணமக்களைப் பற்றி நாம் சிந்திப்பதில்லை.

அதைப் போலவே, மீட்கப்பட்ட ஒரு கிறிஸ்தவர் தன் கடமையிலிருந்து விலகிச் செல்வது, தன்னைப் படைத்து மீட்ட கடவுளுக்கே செய்யப்படும் பெரிய அவமானமாகும். கிறிஸ்தவர்களாகிய நமக்குக் கடவுளின் வெளிப்பாடும், சிறப்பு இடமும் தரப்பட்டுள்ளது. இவ்வளவு பெரிய கொடையைப் பெற்ற நாம், அதற்கான நிபந்தனைகளின்படி வாழாமல் இருப்பது கடவுளுக்குச் செய்யும் துரோகம் அல்லவா?

உவமையில் கன்னியர்கள் தங்கள் விளக்குகளுக்கு எண்ணெய் கூடுதலாக வைத்திருப்பது அவர்களின் கடமையாக இருந்தது. அந்தச் சிறிய கடமையைச் செய்திருந்தால் அவர்களுக்குப் பெரிய பரிசாகிய திருமண விருந்து கிடைத்திருக்கும்.

அதைப் போலவே, நமக்கும் கடவுள் சில எளிய கட்டளைகளைத் தந்துள்ளார். அவற்றை நாம் கடைப்பிடித்தால், முடிவில் முடிவில்லாத நித்திய மகிழ்ச்சியைப் பெறலாம். ஆனால் இன்று நம்மில் பலரும், மதியற்ற கன்னியர்களைப் போல, கைகளில் வெறும் விளக்குகளைப் பிடித்துக்கொண்டு, தூங்கிக்கொண்டிருக்கிறோம்.

"இதோ மணமகன் வருகிறார்! அவரைச் சந்திக்கச் செல்லுங்கள்!" என்ற குரல் திடீரென கேட்கலாம். அந்த நேரத்தில் செய்வதற்கு ஒன்றுமில்லை; நண்பர்களின் உதவியோ, எண்ணெய் இரவல் வாங்குவதோ முடியாது. ஒவ்வொருவரும் அப்படியே ஆண்டவர் முன் நிற்க வேண்டியிருக்கும்.

இப்போது நாம் என்ன செய்ய வேண்டும்?

இப்பொழுதே ஆண்டவரிடம் மன்றாடுவோம். இறை இரக்கத்தின் ஆண்டவரே, எங்களின் இதயக் கண்களையும் காதுகளையும் திறந்தருளும். எங்களை மனமாற்றத்திற்குக் கொண்டு வந்து ஆவிக்குரிய வாழ்வு வாழக் கற்றுத் தாரும். தூய வாழ்வு வாழவும் சாட்சியான வாழ்வு வாழவும் உதவி செய்யும்.

பெர்சியுஸ் ஜேம்ஸ்

ஐக்கியத்திலும், ஒத்துழைப்பிலும், இறைத்தூதிலும் இணைந்து பயணிப்போம்



அக்டோபர் 26 அன்று, தீபகற்ப மலேசியப் பணிக்குழு (PMPT), பினாங்கு கத்தோலிக்க மறைமாவட்ட மையத்தில் ஒன்றுகூடியது. நமது கூட்டுப் பங்களிப்புப் பயணத்தைச் சிந்தித்துப் பார்க்கவும், 2027-ஆம் ஆண்டை நோக்கி முன்னோக்கிச் செல்லவும் இக்கூட்டம் நடைபெற்றது.

"ஆழத்திற்குப் படகைத் தள்ளிப் போங்கள்" (லூக்கா 5:4) என்ற நற்செய்தி அழைப்பினால் ஈர்க்கப்பட்டு, இந்தச் சந்திப்பில் ஆயர்கள் மற்றும் குருக்களின் வழிகாட்டுதலுக்குச் செவிசாய்த்தல், நமது பிராந்தியச் சூழல்களையும் எல்லைகளையும் கண்டறிதல், மற்றும் மலேசியப் பணிக்குழு மாநாட்டிற்குப் (MPC) பிந்தைய முக்கிய ஆன்மீக முன்னுரிமைகளை விவேகத்துடன் தேர்வுசெய்தல் ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.

மேலும், இந்தச் சந்திப்பு PMPT பணிக்குழுவின் முக்கியப் பொறுப்புகளை மீண்டும் உறுதிப்படுத்தியது:

- பல்வேறு பேராயப் பங்குகள் மற்றும் மறைமாவட்டங்களுக்கு இடையே அன்புறவை (Communion) வலுப்படுத்துதல்
- அடிப்படைச் சமூகக் குழுக்களை (BECs / அன்பியங்களை) ஆதரித்து ஊக்கப்படுத்துதல்
- ஆன்மீக அனுபவங்களையும் வளங்களையும் பகிர்ந்துகொள்ளுதல்
- ஒவ்வொரு உள்ளூர் திருஅவையின் தனிப்பட்ட தேவைகளுக்கு மதிப்பளித்து, இறைத்தூதுப் பணியில் (Mission) இணைந்து செயல்படுதல்

தூய ஆவியானவர் நமது விவேகமான சிந்தனைகளைத் தொடர்ந்து வழிநடத்தி, ஒருவருக்கொருவர் இணைந்து பயணிக்கும், இறைவாக்குச் சொல்லும் திருஅவையாக உருவெடுக்க நமக்குத் துணிவைத் தருவாராக!

பங்குச் செய்திகளை அனுப்ப அழைக்கிறோம்

உங்களின் கட்டுரைகள், கருத்துக்கள், பகிர்வுகள், பங்குச் செய்திகளை நாங்கள் பெரிதும் வரவேற்கிறோம். 400-500 சொற்களுக்குள் அமைந்த கட்டுரைகள், அவற்றுக்கான விளக்கக் குறிப்புகளுடன் (caption) கூடிய உயர் தெளிவுத்திறன் (HD) கொண்ட JPG அல்லது PNG வடிவத்திலான புகைப்படங்கள் ஆகியவற்றை அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

உங்களது கட்டுரைகளை பின்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது வாட்ஸ்அப் எண்ணிற்கு அனுப்பி வைக்கலாம்:

மின்னஞ்சல்: tamil@herald.com.my வாட்ஸ்அப்: 012-5599015